செய்தி வெளியீடு எண்–568 நாள்–15.7.2008

# <u>சத்துணவுத் திட்டத்தில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாரத்திற்கு மூன்று நாள் வாழைப்பழம் வழங்கும் புதிய திட்டம்</u>

## <u>சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார்.</u>

2006 சட்டமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையில், வாக்குறுதி அளித்தபடி, பள்ளி மாணவ மாணவிகளுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை வழங்கும் திட்டத்திற்கு 13.5.2006 அன்று தி.மு.க. அரசு பொறுப்பேற்ற விழா மேடையிலேயே முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டார்.

பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளைக் "கல்வி வளர்ச்சி நாள்" எனத் தமிழகத்தில் உள்ள பள்ளிகள் அனைத்திலும் கொண்டாட வேண்டுமென 24.5.2006 அன்று ஆணையிடப்பட்டு, சட்டமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, 15.7.2006 அன்று கொண்டாடப்பட்ட கல்வி வளர்ச்சி நாள் விழாவில், சத்துணவுடன் வாரம் இரண்டுமுறை முட்டை வழங்கும் திட்டமும், 15.7.2007 அன்று கொண்டாடப்பட்ட "கல்வி வளர்ச்சி நாள்" விழாவில் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டமும் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் வாயிலாக, 2 வயது முதல் 15 வயது வரையுள்ள ஏறத்தாழ 71 இலட்சம் குழந்தைகளும், பள்ளி மாணவ மாணவிகளும் பயன் பெறுகின்றனர்.

சத்துணவில் ஏற்கனவே வேக வைத்த கொண்டைக் கடலை, பச்சைப்பயறு மற்றும் உருளைக் கிழங்கு ஆகியவைகளும் வழங்கப்பட்டுவருகிறது. தற்போது முட்டை சாப்பிடாத குழந்தைகள் பயன்பெறும் வகையில், இந்த ஆண்டின் கல்வி வளர்ச்சி நாளான 15.7.2008 முதல் சத்துணவில் முட்டை உட்கொள்ளாத குழந்தைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் முட்டைக்கு மாற்று உணவாக வாழைப்பழம் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

அந்த ஆணையின்படி, ஆண்டுக்கு ஏறத்தாழ ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில், சத்துணவுத் திட்டத்தில் முட்டை சாப்பிடாத ஏறத்தாழ 90 ஆயிரம் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு திங்கள், புதன் மற்றும் வியாழக் கிழமைகளில் வாழைப்பழம் வழங்கும் திட்டத்தை சென்னை, ஆயிரம் விளக்கு, மாதிரிப் பள்ளி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான "கல்வி வளர்ச்சி நாள்" விழாவில் முதலமைச்சர் கலைஞர் இன்று (15.7.2008) தொடங்கி வைத்தார்.

**இவ்விழாவில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு. க. வேங்கடபதி, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா. சுப்பிரமணியன், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டி. சுதர்சனம், திரு.செ. குப்புசாமி, எம்.பி., திரு. அ.அ. ஜின்னா, எம்.பி., கவிஞர் கனிமொழி, எம்.பி., சென்னை மாநகராட்சி துணை மேயர் திருமதி. சத்தியபாமா, பள்ளிக் கல்வித்துறை செயலாளர் திரு.ம. குற்றாலிங்கம், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை செயலாளர் திரு.நா.ச. பழனியப்பன், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் பெருமாள்சாமி மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.**

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.